Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஜோதி



ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி, இலங்கை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே. - சுத்தானந்தர்

ஜோதி 20 | கீலக ௵ புரட்டாதி ௴ 1 ௳ [17-9-68] | சுடர் 11


# பொருளடக்கம்


| | |
|---|---|
| கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறியார் | 291 |
| மதுபானம் விளைக்கும் மகா நாசம் | 292 |
| பெருங் குடி மக் கள் | 293 |
| அபரோக்ஷானுபூதி | 297 |
| சிவ - சிவ ரகசியம் | 299 |
| கச்சியப்பர் கண்ட காட்சி – 11 | 310 |
| பிலாய் மீண்டோம் | 313 |
| ஆபிரிக்காவில் ஸ்ரீ சத்திய சாயி பாபா | 318 |
| அரனுல் ஆகாதது அடியவரால் ஆகும்! | 321 |




## ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள் சந்தா 100-00
வருட சந்தா 3-00
தனிப்பிரதி சதம் 30


கௌரவ ஆசிரியர் திரு. க. இராமச்சந்திரா
பதிப்பாசிரியர் திரு. நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி. போன்: 353



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறியார்

உள்ளுண்மை ஓரார் உணரரர் பசுபாசம்
வள்ளன்மை நாதன் அருளினின் வாழ்வுறார்
தெள்ளுண்மை ஞானச் சிவயோகஞ் சேர்வுறார்
கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறியாரே.

— திருமூலர்.

கள்ளுண்பவர்கள் பெரியோரின் கருத்தையும் அறியார்; இறைவனுடைய கருத்தையும் அறியார்; இறைவனருள் வழிப்பட்டாரது கருத்தையும் அறியார்; தமது கருத்தையும் அறியார். காரணம் அவர்களது அறிவைக் கள்ளு கொலை செய்து விட்டது. உடலுக்கு உயிர் எப்படியோ உயிருக்குப் பரமாத்மா அப்படியே. இதனையே பெரியோர் உள்ளுண்மை என்று குறிப்பர். மது மயக்கத்தினால் சுய அறிவு கொல்லப்படும் போது அறிவுக்கு அறிவாய் இருக்கும் பொருளை உணர்வது எப்படி? இறைவனை உணராதவர் ஆன்மாவை உணரமாட்டார். இரண்டையும் உணராதவர் பாசத்தையும் உணரமாட்டார். தம்மை ஆன்மா என்று உணராதவர் உடற்சிறையினின்று விடுபடுவதையோ இறைவனை அடைவதையோ அறியார். வேண்டுவார் வேண்டுவதை ஈபவன் இறைவன். அவனே முழு முதல்வன். அவன் ஒருவனே குறைவிலா நிறைவானவன். அவனருளாலே அவன்தாள் வணங்க வேண்டும் என்பதைக் கள்ளினால் அறிவு மயங்கப் பெற்றார் உணரார். தெளிந்த உண்மையாகிய திருவடி உணர்வே சிவஞானம் எனப்படும். அச் சிவஞானத்தால் எய்தப் பெறுவது சிவயோகம். சிவயோகம் என்பது சிவ இணக்கமாகும். எண்ணல், இருத்தல், இயைதல், இயங்கல் நான்கும் முறையே உருவ தரிசன யோகபோகம் என்பர். இத்தகைய சிவயோகத்தைச் சேரமாட்டாதவர் யார் என்றால் அழி கள்ளுண்ணும் மாந்தர் என்க. இம் மாந்தர் சிவபெருமான் தங்களுக்குப் பிறப்பினைத் தந்தருளிய திருவுள்ளக் குறிப்பினையும் உணராதவராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபானம் விளைக்கும் மகா நாசம்

கள், சாராயமும் கஞ்சாவும் அவற்றின் பித்தம் பிடித்தவர்களையும் அவற்றை விற்பவர்களையும் அதல பாதாளத்தில் ஆழ்த்தி விடுகின்றன. குடிகாரனுக்குத் தன் மனைவிக்குந் தாய்க்கும் தங்கைக்கும் வித்தியாசந் தெரியாது போய் விடவும், அவன் நிதானம் இருக்கையில் செய்யக் கூசும் பாபங்களையும் செய்கிறான். தொழிலாளருடன் தொடர்புள்ளவர்களுக்கு அவர்கள் கள்ளரக்கன் கையில் சிக்கிவிட்டால் எவ்வளவு மோசமாய் ஆகிவிடுகிறார்கள் என்பது தெரியும். தொழிலாளர்கள் அப்படி, மேல் வகுப்பார் சரியாகவே நடந்து கொள்ளுகிறார்கள் என்பதுமல்ல. கப்பலின் தளபதி ஒருவன் குடிபோதையில் இருந்தபோது தான் யார் எங்கே இருக்கிறோம் என்பதையே மறந்து போய் விசித்திரமாய் நடந்து கொண்டது எனக்குத் தெரியும். அப்போது கப்பலின் பொறுப்பை அங்கே அவன் கீழிருந்த முதல் அதிகாரியிடம் ஒப்புவிக்க வேண்டியதாயிற்று. பெரிய பாரிஸ்டர்களும் ஏகமாய்க் குடித்து விட்டுப் பன்றிபோல் சாக்கடையில் கிடந்து புரண்டிருக்கிறார்கள்.

*

கஞ்சாவும் கள், சாராயமும் சைத்தானின் இரு கைகள் சைத்தான் தன்னிடம் சிக்கியவர்களை அவற்றைக் கொண்டு தாக்கி மெய்மறக்கச் செய்து பித்தர்போல் நடக்கச் செய்கிறது.

•

மலேரியா முதலிய நோய்களை விட கள், சாராயத்தினாலும் கஞ்சாவினாலும் விளையுந் தீமைகள் துன்பம் மிகவும் அதிகம். ஏனெனில் அந்த விஷக் காய்ச்சல் உடலை மட்டும் பாதிக்க, கள், சாராயமும் கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும் கெடுத்து விடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருங் குடி மக் கள்

(ஆசிரியர்)

பரம்பரையாக ஒழுக்கத்தைப் பேணிவந்த குடும்பத்தி லுரைப் பெருங்குடிப் பிறந்தார் என்றும் பெருங்குடி மக் கள் என்றும் போற்றினர் சான்றோர். நல்லவர்களை நல்ல வர்களாக வாழச் சாத்தான் விடமாட்டான் என்று சம யங்கள் கூறுகின்றன. சாத்தானின் சூழ்ச்சியினால் பெருங் குடி மக்கள், பெருங் குடிமக்களாய் மாறிவிட்டனர்.

'குடியாத வீடு விடியாது' என்று சொல்லும் அளவிற்கு எமது தேசத்தில் மது அரக்கன் புகுந்து விட்டான். பௌத் தம், இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய நான்கு மதங் களுக்கும் உறைவிடமானது நமது ஸ்ரீலங்கா. சிவனடிபாத மும், கதிர்காமமும், மடுமாதாத் திருப்பதியும் சமரசத்தை மக்கள் உள்ளத்தில் பதிக்கும் தலங்களாக மாறிவிட்டன. நான்கு சமயங்களும் மதுவை ஒழிக்க வேண்டுமென்று ஆணித்தரமாகப் போதிக்கின்றன. சமய போதனைகள் புத் தகத்திலும் பேச்சிலும் மாத்திரம் உள்ளன. நாள்தோறும் மக்கள் மது அரக்கனுக்கு அடிமையாகிக் கொண்டு வருவ தைக் காணுந் தோறும் எந்த அறிவுள்ள மனிதனும் மனம் கலங்காமல் இருக்க முடியாது.

படித்தவர்கள், பெரும் பதவிகளில் வகிப்போர், பட் டம் பெற்றோர் தமக்குக் கீழே உள்ளவர்களுக்கு முன்மாதி ரியாக நடக்க வேண்டியவர்கள். பெரியவர்கள் சிறியவர் களின் எதிர்கால வளர்ச்சிக்காக சில பழக்கங்களைத் தியா கஞ் செய்ய வேண்டியவர்கள். பெரியவர்கள் என்று சொல் லிக் கொள்பவர்களைப் பார்த்து அவர்களுக்குக் கீழே உள் ளவர்கள் கெட்டுப் போவதை நாள்தோறும் பார்க்கின்றோம்.

அப்பா குடித்த சாராயத்தை மகன் ருசி பார்க்கின் றான். அப்பா புகைத்த சிகரெட்டிற்கு மகன் நெருப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூட்டி வைக்கின்றான். அப்பாவும் மகனும் ஒரு பக்கெற்றில் சிகரெற் பரிமாறிக் கொள்ளுகின்றனர். அப்பா, அம்மா, குழந்தைகள் எல்லோருமே ஒரு போத்தல் சாராயத்தில் பங்கு போடுகின்றனர்.

இவற்றினால் பெரியோருக்குச் செய்யும் மரியாதை சமூகத்தை விட்டுச் சென்று விட்டது. பஸ்ஸிலும் புகையிரதத்திலும் சினிமாக் கொட்டகைகளிலும் புகைத்துப் புகைத்து எதிரே உள்ள அப்பாவிப் பிரயாணிகளின் மூக்கில் ஊதி அவர்களைத் திக்குமுக்காடச் செய்கின்றார்கள். பிரயாணம் செய்து விட்டு உடையைக் கழற்றினால் ஒரே புகை நாற்றம். புகையினால் சுத்தமான காற்றைக் கெடுப்பவர்கள் தம்மை நாகரிகமுள்ளவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகின்றார்களே! இதுதான் மிக வேடிக்கையானது. புகையிரதத்தில் பிரயாணம் செய்யும்போது மதுவினால் மனிதன் மிருகமாகிக் கொண்டிருக்கின்றான்.

மனிதப் பிறப்பினால் தேவ நிலைக்கு உயர வேண்டிய மனிதன், மதுவினால் மிருக நிலைக்குத் தள்ளப்படுகின்றான். ஒரு சிலர் திடீரெனப் பணக்காரர்களாகி விடுகின்றார்கள். பணத்தை எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்பது அவர்களுக்குத் தெரியாது. ஆங்கிலேயர் தம் நாட்டிற்கு ஏற்ற வகையில் சில பழக்கங்களை இங்கும் கொண்டு வந்துள்ளார்கள். அவர்களுடைய எத்தனையோ நல்ல பழக்கங்களைத் தவற விடுத்து வேண்டாத பழக்கங்களுக்கு அடிமையாகிச் சமூகத்தைக் கெடுத்து வருகிறார்கள் நம் நாட்டுப் பெருங்குடிமக்கள்.

நேரத்திற்குக் கருமம் ஆற்றுதல், கமத்தொழிலுக்கு முதலிடம் கொடுத்தல் போன்ற நல்ல செயல்களை விடுத்து மக்கள் சமுதாயத்தைக் கீழ் நிலைக்குத் தள்ளும் பழக்கங்களைப் பழகி இப்பொழுது அவற்றை விட முடியாது. தத்தளிக்கின்றார்கள். நாடு நன்கு வாழ வேண்டுமானால் உணவுற்பத்தியிலும் பார்க்க விரைந்து செய்ய வேண்டியது மதுவிலக்காகும். மதுவினால் மக்கள் சக்தி வீணாக்கப்படுகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது. மனிதத் தன்மையைக் கொலை செய்து மிருகத் தன்மையை வளர்க்கின்றது.

அரசாங்கத்தினர் பிரச்சார மூலம் மக்கள் உள்ளத்திலே பதியச் செய்து படிப்படியாக மதுவிலக்கைக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லுகின்றார்கள். குடிகாரனுக்கு உபதேசம் செய்வது கிணற்றுள் விழுந்த பொருளைத் தீப்பந்தம் கொண்டு தேடுவதற்குச் சமம் என வள்ளுவர் கூறுகின்றார். முதலில் சட்டத்தினால் மதுவிலக்கைக் கொண்டு வந்து அதைத் தொடர்ந்து பிரச்சாரம் செய்தால் அது பெரும் பயனைக் கொடுக்கும். தென்னிந்தியா மதுவிலக்கைக் கொண்டு வந்து அதில் வெற்றியும் கண்டுள்ளது. அதே போல அரசாங்கம் தனது குடிஜனங்களில் அன்புள்ளதாயிருந்தால் உடனடியாக மதுவிலக்கைக் கொண்டுவந்து மாக்கள் நிலையிலிருக்கும் குடிமக்களை மக்கள் நிலைக்கு உயர்த்த வேண்டும்.

காந்தி யுகத்தில் வாழ்வதாகப் பெருமையுடன் கூறிக் கொள்ளுகின்றோம். கதர் கட்டிக் கொண்டு கள்ளுக்கடைக்குச் செல்லுகின்றோம். அரசாங்கம் வருவாய் ஒன்றையே எதிர்பார்த்து மதுவிலக்குக் கொண்டு வருவதைப் பின் போட்டுக் கொண்டு வருகின்றது. வேறு எத்தனையோ நல்ல வழிகள் மூலம் வருமானத்தைக் கூட்டலாம். மது அமுலில் இருக்கும்வரை குற்றங்கள் மலிந்து கொண்டே இருக்கும் என்பதை அரசாங்கம் உணரவில்லை.

மது இருக்கும் வரை மக்கள் குடித்துக் கொண்டே இருப்பார்கள். மது விலக்கு வந்து விட்டால் முதலில் பகிரங்கமாகக் குடிப்பது நின்று விடும். இரகசியமாக மது தயாரித்துக் குடிப்பது நின்று விடும். இரகசியமாக மது தயாரித்துக் குடித்தாலும் சட்டமூலம் அதனை இல்லாது செய்து விடலாம். மது இருக்கும்வரை குற்றங்கள் மலிந்து கொண்டே இருக்கும். குற்றங்கள் மலிய பொலிசாருக்கும் கோர்ட்டுக்கும் செலவு கூடிக் கொண்டே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பக்கத்திலே புதிய கோயில்களும் பழைய கோயில்களுக்குப் புனருத்தாரணமும் நடந்து கொண்டிருக்க எதிர்ப் பக்கத்திலே சாராயத் தவறணைகளும் கள்ளுக் கொட்டில்களும் கூடிக் கொண்டு வருகின்றன. புதிய கோயில் ஒன்று ஒரு ஊரில் கட்டுவதானால் அரசாங்கத்திடம் உத்தரவு பெறுவதற்கு ஆண்டுக் கணக்கில் காலதாமதம் ஏற்படுகிறது. தவறணைகள் திறப்பதானால் மூன்று நாளிலே திறந்து விடலாம்.

இப்படி எல்லாம் கூறுவதற்குக் காரணம் ஒன்றுண்டு. இன்றைய மக்கள் சமுதாயம் மதுவின் கொடுமையினால் சீரழிந்து வருகின்றது. கோடீஸ்வரர்களாக வாழ்ந்துவந்த பெருங்குடும்பங்கள் இரகசியக் குடியினால் ஓட்டாண்டியானதைக் கண்கூடாகப் பார்க்கின்றோம். நாட்டு நன்மையில் அக்கறையுள்ள எந்த மனிதனும் உடனடியாக மது விலக்கை அமுல் நடத்த வேண்டுமென்றே விரும்புவான். கண் கெட்ட பின் சித்திரம் வாங்கி என்ன பயன்? அதேபோல மக்கள் எல்லாரும் மாக்களாக மாறியபின் பொருளாதாரம் வளர்ந்து என்ன பிரயோசனம்?

தேசபக்தி உள்ள எந்தப் பிரஜையும் தன்னாட்டுப் பிரஜை மதுவினால் அழிந்து போவதை விரும்பமாட்டான். ஆகவே தேசபக்தி உள்ளவர்கள், நாட்டு நலனில் அக்கறை உள்ளவர்கள், சமய ஒழுக்கம் நிலைபெற வேண்டும் என்று நினைப்பவர்கள், சமுதாயம் வளர்ச்சியுற வேண்டும் என்று நினைப்பவர்கள், குழந்தைகளில் அக்கறை உள்ளவர்கள், பொருளாதாரம் செழித்து மேலோங்க வேண்டும் என்று விரும்புபவர்கள், தம் கட்சியே அடுத்த முறை அதிகாரத்திற்கு வரவேண்டுமென்று விரும்பும் அரசியல்வாதிகள், இன்று பாராளுமன்றத்தில் இருக்கும் மக்களின் பிரதிநிதிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஏகோபித்த மனதோடு ஒரே குரலில் மதுவிலக்கு உடனடியாகக் கொண்டுவரப்பட வேண்டும் என்று கூறவேண்டும். உடனடியாகவே அதற்கான முயற்சிகளில்இறங்கி நாட்டுக்கு நன்மைதேட வருமாறு இத் தேசத்துப் பெருமக்கள் யாவரையும் அழைக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கராச்சாரிய சுவாமிகள் அருளிச் செய்த
# அபரோக்ஷானுபூதி
## (தன்னை அறிதல்)

121 சித்தத்தைப் பரிபூரண சைதன்னியத்தில் மூழ்க வைத்துத் தன்னையே எல்லாவற்றிலும் கண்டிருத்தலே விடுதலை நாடிச் சாதனை செய்யும் மெய்யடியார்கள் அநுட்டிக்கும் பிரத்தியாகாரம் ஆகும். (மனவடக்கம்)

122 பார்ப்பதெல்லாம் சிவமாகப் (பிரமமாக) பார்த்தலும் அப் பார்வையும் ஆற்றொழுக்குப் போன்று தொடர்புள்ளதுமாக இருத்தலே தூய தாரணை எனப்படும்.

123 'அகம் பிரமாஸ்மி' சீவன் சிவனேயென்னும் சிந்தனையில் சதா திளைத்தும் எதனையும் சாராது சுட்டிறந்திருத்தலே தியானமாகும். இதுவே பேரின்பத்தை விளைவிக்கும்.

124 எண்ணங்களெதுவு மற்று அது நானென்று மகலாத் தியானத்தால் அதுவேயாய் பிரமமாய் நிலைத்திருத்தலே சமாதியெனப்படும். இதுவே பூரண அறிவாகும்.

125 இந்தத் தியானத்தையே ஒரு சாதகன் பத்திரமாகச் சாதிக்க வேண்டும். இது அவனது இயல்பான இன்ப நிலையை அளிக்கும். வேண்டும் போதெல்லாம் அந்த நிலையை அடையக் கூடிய ஆற்றலை எய்தும் வரை இச் சாதனை சாதிக்கப்பட வேண்டியதாகும்.

126 அப்பொழுதே அவன் யோக சிரேட்டனாய் விரதம் சாதனை யாவும் மாண்ட மனத்தனாகி விடுகிறான். சங்கற்பங்களெதுவுமற்ற இந்த நிலை மனத்துக்கும் வாக்குக்கும் எட்டாததொன்றாகும்.

127–128 சமாதி சாதனையாகும் போது விசாரக் குறைவு, சோம்பல், புலனின்ப நாட்டம், தூக்கம், மந்தம், மனமாறுபாடு, எய்திய வல்லமையளவில் திருப்தியுறல், புலன்களின் முரண்பாட்டினால் எதனையும் செய்யாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சும்மா இருளில் மூழ்கியிருத்தல் ஆதியாம் தவிர்ப்பதற் கரிய எண்ணற்ற தடைகள் தோன்றுவது இயல்பு. பிரம்ம ஞானத்தை விழைபவன் மெல்ல மெல்லமாகப் (படிப்படியாக) அவைகளைக் களைந்து விடவேண்டும்.

129 மனிதன் எதனைப்பற்றி நினைக்கின்றானோ அவன் கால கதியில் அதுவாகி விடுகிறான். ஒரு பொருளைப் பற்றி நினைக்கும் போது அதுவாகவும், எதனையும் பற்றி நினைக் காத போது சூனியமாகவும் ஆகுதல் இயல்பு. பிரம்ம நினைப்பினாலேயே ஒருவன் பூரணமாகிறான். ஆகவே பூரணத்தை யடைவதற்காக ஒருவன் சதா பிரம்ம நாட்டமுடையோனாகுக.

130 இந்த மேலான தூய பிரம்ம நாட்டத்தைக் கருத்திற் கொள்ளாதார் வாழ்வு விழலாகும். அவர்களுக்கும் விலங்குகளுக்கும் வேறுபாடேதுமில்லை.

131 பிரம்ம பாவனையால் அறிவு முதிர்ச்சியடைந்து பிரம்ம மாகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் சென்றவிட மெங்கும் சிறப்புறுவர்.

132 சதா பிரம்ம சந்நிதான உணர்வுடையவர்களே இறுதி யில் பிரம்ம ஞானிகளாகப் படுகின்றனர். வாசாஞானி அப்படியாகின்றிலர்.

133 உலக இன்பங்களை நாடுவதும், பிரமத்தைப் பற்றிப் பலபடப் பேசுவதுமன்றி எள்ளளவேனும் அநுபூதி எய் தாதவர் தமது அறியாமையால் மாறி மாறி இறந்தும் பிறந்தும் உழல்வர்.

134 பிரமன், சுகர், சனகர் ஆதியோரைப் போல் கணமே னும் இடையீடின்றி சதா பிரமத் தியானத்தில் ஈடு பாடு கூடியவரே உண்மையான பிரம்ம சாதனையை அநுட்டிப்பவராகும்.

135 காரணத்தின் பண்பு காரியத்திலுளதாகும். ஆயினும் காரியத்தின் இயல்பு காரணத்தில் அன்று. ஆகவே ஆராய்ந்து பார்த்தால் காரியமில்லாவிடத்துக் காரண முமில்லாததாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீவ - சிவ ரகசியம்

(கவியோகி, மகரிஷி - சுத்தானந்த பாரதியார்)

ஓம் சுத்த சக்தி ஓம் சிவம்!
சிவோஹம்! சிவமயம்!

இந்த மந்திரத்தைச் சென்ற நாற்பதாண்டுகளாக நான் சாதனம் செய்தேன். கர்மம், பக்தி, ஞானம், விஞ்ஞானம், சச்சிதானந்தம், ஸம்யமம், ஆத்மலயம், இதயாம்பர சித்தி, அம்பலநடனசித்தி, ஸஹஸ்ராரசித்தி, துரியநிஷ்டை, ஸஹஜநிஷ்டை, மகாதுரியசித்தி ஆகிய யோக ஞானப்படிகளை எட்டிப் பிடிக்க இந்தப் பூர்ண சிவசக்தி மந்திரமே வழி காட்டியது.

8. காற்றின் கணக்கு

ஜபசாதனம் முதலில் வாக்கினால் அல்லது எழுத்தினால் தொடங்கும். சுத்தமாகக் குளித்து, நடராஜர் அல்லது சிவலிங்கத்தின் முன் அமர்ந்து, ஜபமாலையில் 108 முதல் இயன்றதைச் செய்க. இயன்ற போதெல்லாம் சித்தசுத்தியுடன் ஜபம் செய்க. ஆறு மாதத்தில் மனம் பண்படும். பிறகு வாயாற் சொல்லாமல் மனதால் ஜபிக்கவும். ஓராண்டு ஜபித்தால் மனம் அடங்கும். இதயத் துடிப்பும் ஜபத்திற்கேற்றபடி தாளம் போட்டுக் குதிக்கும். அதே வேகத்தில் நாடிகளும் துடிக்கும். உடல் முழுதும் ஜபத் துடிப்பாகும். பிறகு ஜபப்ராணயாமம் பழகலாம். பிராணயாமத்தில் மூச்சை இழுத்தல், அடக்கல், விடுதல் என்ற மூன்று நிலைகள் உண்டு. தொடக்கத்தில் ஒரே சீராக 'ஓம் சுத்த சக்தி! ஓம் சிவம்! சிவோஹம்! சிவமயம்' என்று மூச்சை இழுத்து, அதே அளவில் விட்டுப் பழகவும், இடது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூக்கால் இழு, வலது மூக்கால் விடு; மறுபடி வலது மூக்கால் இழு; இடது மூக்கால் விடு. மீண்டும் இடதால் இழு, வலதால் விடு. இதை விரைவாகச் செய்யலாம். இதனால் நாடி சுத்தியாகும். பிறகு ஒரு மந்திர அளவு இழுத்து நான்கு மந்திர அளவு அடக்கி இரண்டு மந்திர அளவு விட்டுப் பழகவும். இதுவே கும்பகப்ராணயாமம். இவ்வளவு அடக்க முடியாவிட்டால், ஓம் சிவம் என்ற மந்திர அளவை வைத்துக் கொள்க. உயிர்ப்பு எங்கே உதிக்கிறதோ அங்கே ஆன்மா உதிக்கிறது; அது ஒடுங்குமிடம் இதுவும் ஒடுங்கும். அந்த இடமே உள்ளம்.

ஈரெட்டு நான்களவில் ஈர்த்து
அடக்கி விட்டு உயிர்ப்பின்
வேர் எட்ட உண்டாகும் விறு.

காற்றைப் பிடிக்கும் கணக்கறிந்தால் கூற்றையும் உதைக்கும் கொழுந்தடி காணலாம். மந்திரப் பிராணயாமத்தால் குண்டலி சக்தி எழுந்து, ஆதார கமலங்கள் மலரச் செய்யும். மந்திர சாதனம் தீவிரம் ஆக ஆக மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அனுஹதம், விசுத்தி, ஆஞ்ஞை, ஸஹஸ்ராரம் ஆகிய ஏழு ஆதாரங்களிலும் குண்டலி ஏறி எட்டாவதான சுத்த சக்தி நிலையத்தில் மகாகுண்டலியாகி, உடல் முழுதும் விறுவிறுப்பாகப் பரவும். அப்போது ஆனந்தத் தேன் ஊறும்.

ஆறுருவி ஏழேறி ஆனந்தத் தேன் உண்ணும்
சீறியெழும் ஆதாரத் தீ.

9. மனக்கோயில்

அப்போதுதான் சுத்த சக்தி சிவமயமாக ஆன்மா பொலிந்து பேரின்பமடையும். முப்பொருள் உண்மை விளங்கும். முத்தி சித்திக்கும்.

என்னை அறிவென்றான் என்னறிவில் ஆனந்தம்
தன்னைச் சிவம்என்றான் சந்ததமும் — என்னையுன்னைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரா மறைத்ததுவே பாசமென்றுன்; இம்மூன்றும்
ஆராய்ந்தவர் முத்த ராம்.

வாயிலார் நாயனுர் போல் மறவாது சிவனை நினைந்து, நெஞ்சத்தைச் சிவாலயமாக்கினுல், முத்தி சித்திக்கும்.

மறவாமையான் அமைத்த
மனக்கோயில் உள் இருத்தி
உறவாதி தனை உணரும்
ஒளிவிளக்குச் சுடரேற்றி,
இறவாத ஆனந்தம்
எனுந்திருமஞ்சனம் ஆட்டி
அறவாணர்க்கு அன்பென்னும்
அமுதம் அர்ச்சனை செய்வார்.

இந்த உள் வழிபாட்டையும், ஸஹஸ்ராரசித்தியையும் விளக்கப் பாரத சக்தியிலிருந்து ஒரு பாட்டைச் சொல்லுகிறேன்:

ஆயிர இதழ் மலரில் அரியணை அமைத்தனன்;
அறிவொளி விளக்கேற்றினேன்;
ஆர்வத்தில் ஊறிவரும் அன்புப் பெருக்கால்
அகங்குளிர நீராட்டினேன்;
தூயமனமே நல்ல துகிலாய் உடுத்தினேன்;
சுகுணத்தை அணியாக்கினேன்;
துரியபரநாதகண் டாமணி முழக்கினேன்;
சுகந்த சாந்தம் பூசினேன்;
வாயார வரகவியின் மலர்மாலை சூட்டினேன்;
வாழ்வெலாம் அர்ச்சித்தனன்;
மன்னுயிர்த் தொண்டுதரும் மாசற்ற பலனையே
மாண்புற நிவேதித்தனன்;
ஆயா உனக்கிந்த ஞானவழி பாட்டையே
அனவரதம் ஆற்றி மகிழ்வேன்
அதுவென்றும் அவனென்றும் அவளென்றும் அன்பர் தொ
அகநாடகப் பரமனே. (மும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. சிவ தத்துவ ரகசியம்

இவ்வாறு பல படிகளைக் கடந்து கடவுளை அடைய வேண்டியிருக்கிறது. உலகோர் பதி ஞானமேயில்லாமல், முப் பொருள் அறிவேயில்லாமல் வெறும் ஊனுடலையும், மண்ணுலகையும் கண்டு மயங்குகிறார்கள். ஊணே, உடையே, வீடே, பொன்னே, பெண்ணே, மண்ணே என்று திரியும் மாக்கள், கடவுள் இல்லை, வேதமில்லை, ஆகமம் இல்லை, ஆன்மா இல்லை, எல்லாம் புரட்டு என்றால் நாம் நகைக்க வேண்டியதுதான். இவர்கள் செருக்காடும் விஞ்ஞானம், தூல ஞானம்; அவ்யக்த மாயையிலிருந்து பிரிந்த பூத பௌதிக ஞானம். மாயா சக்தி ஆகாசத்தில் மின் சக்தியைச் சுழற்றுகிறது. அதனால் இங்கே மின்பொறி நடக்கிறது. அது சக்தி பொழியாவிட்டால் எடிசன் விளக்கைக் காண்பானா? மார்க்கோனி வானொலி காண்பானா? டாக்டர் ஹாஹின் அணுசக்தி காண்பானா? லாரென்ஸ் அணுமுறி (ஸைக்ளட்ரோன்) காண்பானா? சிற்றறி மாக்கள், முற்றறி நித்தியனை இல்லையென்பது, நீர்க் குமிழிகள் வெள்ளத்தையும், கடலையும் வெறுத்து இல்லையென்பது போலாகும்.

வெள்ளமிலை என்னும் வெறுங்குமிழி போல்வாரே
உள்ளபொருள் உள்ளறியா தார்.

நம்மவருள் சிலர் இப்படி நாத்திகம் பேசுகிறார்களே என்று என்னிடம் பலர் வருந்துகிறார்கள். அவர்களுக்கு ஓர் உதாரணம் சொல்லுகிறேன். வெள்ளரிக்கொடியில் இனிய காய்கள் காய்க்கும்; இடையே இரண்டொன்று கசக்கும். கசந்த காயை விலக்கி, நல்ல காயை நுகர்கிறோம். அது போல் வாதாடாமல், வம்பரை விலகி நம்பரைப் பற்றி வாழ்க.

அநித்தியத்தை நித்தியம் என்று ஆதரிக்கும் பொல்லா
மநித்தருடன் கூடி மருவார் - தனித்திருந்து
மோனந்தமாம் சிவத்தின் மூழ்கி, மலத்தை அறுத்து
ஆனந்த மாய்முந்து வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11 அன்பின் உரு:

பட்டினத்தார் காலத்திலும் தெய்வநிந்தை செய்வோர் இருந்தனர். அவர்களை அவர் எப்படி மதித்தார்?

கல்லார், சிவகதை; நல்லோர்
தமக்குக் கனவிலும் மெய்
சொல்லார்; பசித்தவர்க்கன்னங்
கொடார்; குருசொன்னபடி
நில்லார்; அறத்தை நினையார்;
நின்நாமம் நினைவிற்சற்றும்
இல்லார் இருந்தென்ன
போயென்னகாண் கச்சிஏகம்பனே.

இறைவன் அருளே மாயா சக்தியால் உலகை ஆட்டுகிறது. அந்த அருளே இறைவன் உரு. தாயின் அன்பு தாய்ப்பாலாக உருவாகிக் குழந்தையை ஊட்டுகிறது. இறைவன் கருணை, அருட்பெரும் சோதியாக விளக்கமாகி, உயிர்களை மாசறுத்து ஈடேற்றுகிறது.

அருவாம் சிவனருளும் அன்னைமுலைப் பால்போல்
உருவாகும் அன்பர் உளம்.

ஒன்றேயான கடவுள் சக்தியால் பலவாகத் தோற்றமளிக்கிறது. உள்ளம் குவிந்து ஒன்றுனல் ஒன்றைக் காணலாம்.

இருப்பது ஒரு பொருளே எல்லாம் அதுவே
பிரிப்பது பொய் மாயப் பிணி.
ஒன்றே உயிருலகம்; ஒன்றே உலகிறைவன்
ஒன்றே இறைவன்உறை யுள்.

சிவவாக்கியர் சொல்லுகிருர்:

ஒன்றும் ஒன்றும் ஒன்றுமே உலகனைத்தும் ஒன்றுமே
அன்றும் இன்றும் ஒன்றுமே அனாதியாகத் தோன்றுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னல் நின்ற செய்பொனைக் களிம்பறுத்து நாட்டினால்
அன்று தெய்வம் உம்முளே அறிந்ததே சிவாயவே.

12. அருள் மின்சாரம்

படிப்படியாகச் செல்வோம்; ஒரு மின்சார விளக்கிற்குக் குமிழ், கம்பி இருந்தால் போதுமா? பொத்தானை அமுக்கினாலும் ஒளி வராது. மின்சார ஓட்டம் இருந்தாலே வெளிச்சம் வரும். மின் ஓட்டம் எங்கிருந்து வரும்? மின் பொறியிலிருந்து. பொறிக்கு மின்சாரம் ஆகாசத்திலிருந்து வருகிறது. அங்கே மின் சக்தி ஓடாவிட்டால் இங்கும் ஓடாது. ஒரு பேசும் படம் பார்க்கிறோம். படமா பேசுகிறது? முதலில் ஆள் பேசி, பதிவு செய்தே படம் பேச வேண்டும், ஆடவேண்டும். அதுபோல் இந்த உடம்பும் உயிரால் ஆடும். உயிரும் உயிர்க்குயிரான பரம்பொருளால் ஆடுகிறது.

12. உடம்பின் நுட்பம்

நாம் உடம்பைப் பார்க்கிறோம். கிரேஸ் அனாடமி படித்தால் இந்தத் தூல தேகத்தின் நுட்பங்களை அறியலாம். நம் உடலில் 206 எலும்புகள், 25,00,000 வேர்வைக் கோளங்கள், 33 அடி உணவுக்குழாய், 250 கன அங்குலம் உயிரி, 670 அங்குலம் விரியும் மூளை, ஆயிரக் கணக்கான நரம்புகள், பல நாடிகள் உள்ளன. இவையா நாம்? பிணத்திற்கும் இந்த உறுப்புகள் உண்டு. உறுப்புகள் உணரா, முகரா, கேளா, பேசா, பிணவுடலுக்கு இரத்த ஓட்டம் இயலுமா? உயிருடலில் இரத்தம் சிவப்பது எதனால்? நெஞ்சம் துடிப்பது எதனால்? உயிர்ப்பது எதனால்? உடலுள் ஏதோவொன்று உயிர்க்கிறது. அதனால் உடம்பு ஐம்பூதக் கூட்டுறவு. அந்த உயிருள்ள மட்டும் ஐம்பூதங்கள் கூடி நிற்கும். உயிர் பிரிந்தால் பூதங்கள் பிரியும். எலும்பு, நரம்பு, தசை, தோல், மயிர் இவை மண்ணாகும். விந்து, ரத்தம், மூளை, கொழுப்பு இவை நீராகும். ஊண், உறக்கம், அச்சம், புணர்ச்சியாகிய உணர்வுகள் தீத்தன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகும். இருப்பது, நிற்பது, நடப்பதெல்லாம் வாயுவால். காமக்குரோதிகள் ஆகாயத்தால் இயங்கும். இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, அலம்புடை, ஜிஹ்வை, புருஷன், குகு, சங்கினி ஆகிய நாடிகள், சுரப்பிகள், ஜீவசத்துக்கள் எல்லாம் உயிர் இருந்தாலே நடக்கும். பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிதரன், தேவதத்தன், தனஞ்ஜயன் ஆகிய தசவாயுக்களும் உயிருடலில் சஞ்சரிக்கும் நரப்புகளை இயக்கும். பிணவுடலில் தொழில் புரியாவாம். வசனம், கமனம், தானம், விசர்ச்சனம், ஆனந்தம் ஆகிய வசனாதிகளும், சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரீ ஆகிய வாக்குகளும் உயிர் இருந்தாலே நிகழும். இவையெல்லாம் புறக் கருவிகள். இவற்றில் சிலவே உடற்கூறு நூலார் அறிவர். இவற்றிற்கும் உள்ளே சென்றால் அசுத்த தத்துவம் உள்ளது. அது மொத்தம் 24. ஐம்பூதம், ஐந்து தன்மாத்திரை, ஐந்து ஞானேந்திரியம், ஐந்து கன்மேந்திரியங்கள், நான்கு அந்தக்கரணங்கள் எல்லாம் சேர்ந்தே இயற்கையுடல், பிரகிருதி, க்ஷேத்ரம், நிலம் என்பர். இவற்றிற்குமேல் வித்யா தத்துவம் ஏழுள்ளன: புருஷன், மாயை, காலம், நியதி, அராகம், வித்தை, கலை. இவை ஆன்ம தத்துவம்- வேதாந்திகள் பிரகிருதி, புருஷன் ஆகிய இருபத்தைந்து தத்துவங்களையே கொள்வர். சித்தாந்தம் இன்னும் ஆழச் சென்று, ஜீவனை இயக்கும் சிவம் ஒன்று உண்டு என்றறிகிறது. சிவ தத்துவம் ஐந்து: சுத்தவித்தை, ஈசுவரம், சாதாக்கியம், நாதம், விந்து. தத்துவ வழி அத்துவா: ஆறு அத்துவாக்கள் உண்டு: தத்துவம், கலை, புவனம், வன்னம், பதம், மந்திரம்.

## 13. தத்துவ விளக்கம்

ஒரு கடிகாரத்தில் உள்ள விசைகளும், சக்கரங்களும் போன்றவை தத்துவங்கள். அவை ஊழிகாலம் வரையில் நின்று உலகையும், உயிர்களையும் இயக்கும். பூதம், தன்மாத்திரை, ஞான கன்மேந்திரியங்கள் அந்தக்கரணங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தை, சிவம் ஆகிய முப்பத்தாறு தத்துவங்களும் அகக் கருவிகள். பஞ்சபூத காரியங்கள் 25, வாயு 10, நாடி 10, வாக்கு 4, ஏஷணை 3, வசனாதி 5 ஆக அறுபதும் புறக் கருவிகளாம். வித்திலிருந்து மரம் கிளைப்பது போலவே, இவையெல்லாம் இறைவனிடமிருந்து கிளைக்கும். எல்லாம் ஆன்மாக்களை ஈடேற்றித் தன்மயமாக்க இறைவன் அருளிய கருவிகளேயாம். சுத்த பரமாத்மன் இருந்தபடி இருக்கிறான். தனது குடிலையான மாயா சக்தியைச் சிறிது அசைக்கிறான். மேக வானில் மின் இடிப்பது போல நாதம் எழுகிறது. நாதம் சிவதத்துவம், அறிவைத் தருவது. அதிலிருந்து விந்து உண்டாகும்; இது கர்மசக்தி, லயதத்துவம். விந்துவிலிருந்து சாதாக்கியம், அல்லது சதாசிவ தத்துவம் உண்டாகும். இதில் நாத விந்துக்கள் சமமாகக் கூடி நிற்கும். இதிலிருந்து ஈஸ்வர தத்துவம் உண்டாகும். அதிலிருந்து கிரியை குறைந்து ஞானம் மிகுந்த சுத்தவித்தை உண்டாகும். நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுரம், சுத்த வித்தை ஆகிய இவை சிவனருளால் இயங்கும் சுத்தசிவ தத்துவங்கள். இவற்றிற்கு சிவம், சக்தி, ருத்ரன், மகேசன், சதாசிவன் ஆகிய ஐவரும் அதி தேவதைகள். ஞானம், கிரியை இரண்டும் இவற்றால் ஆகும். காரிய மாயையிலிருந்து காலம், நியதி, கலை, வித்தை, அராகம் ஆகிய ஐந்து கஞ்சுகிகள் தோன்றும். இவையே சுத்தாத்ம புருஷனுக்கு உடைகளாகும். கலாதத்துவத்திலிருந்து பிரகிருதி தத்துவம் உண்டாகும். பிரகிருதியிலிருந்து சத்வம், ராஜஸம், தாமதம் ஆகிய முக்குணங்களும் உண்டாகும். குணத்திலிருந்து புத்தி அதினின்று அகங்காரம். அதிலிருந்து மனம், சித்தம் ஆகிய அந்தக் கரணங்கள் உண்டாகும். இதனால் உலகுடன் தொடர்பு கொண்டு உயிர் வாழ்க்கை நடக்கிறது. இந்தத் தத்துவங்களை ஒரு மானிட உருவில் பாவித்தால், நெற்றி நாதவிந்து, மூக்கு சாதாக்கியம், கழுத்து ஈசுரம், மார்பு சுத்தவித்தை, மார்புக்குழி மாயை, வயிறு காலம், நியதி, கலை, அராகம் புருஷன்; இடுப்பு சித்தம், புத்தி; தொடை மனம், அகங்காரம்; தொடை தசேந்திரியம், முழங்கால் தன்மாத்திரை, கால் பஞ்சபூதாதிகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் தத்துவ வாழ்விற்குப் பரிணாமம் உண்டு. சாக்கிரத்தில் எல்லாத் தத்துவங்களும் வேலை செய்யும்; சொற்பனத்தில் மனமாதி சூக்கும சரீரம் இயங்கும். சுழுத்தியில் காரண சரீரமான ஆன்மா சித்தச் சுழலால் இயங்கும். துரியத்தில் பிராண சக்தியும் புருஷனும் இயங்கும். துரியாதீதத்தில் எல்லாம் அமைதி சேரும், பரிணாமம் இல்லை

## 15. மூன்று நிலைகள்

ஆன்மாக்கள் மூன்று பக்குவ நிலையில் பரிணாமப் படுகிறார்கள். புல், மரம், பூச்சி, புழு, பறவை, விலங்குப் படிகளிலிருந்து மானிடமான ஆன்மாக்கள் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மாசுகள் நிறைந்தவர்கள். இவர்கள் சகலர், தூல சூக்கும தேகிகள். இவர்கள் ஒரு குருவைப் பணிந்து நடந்தே இருவினை ஒப்பும் மலபரிபாகமும் அடைந்து ஈடேறலாம். இரண்டாவது பக்குவிகள் ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங் கொண்டவர்கள், இவர்கள் பிரளயாகலர்; பூதம், தன்மாத்திரை, ஞான கர்மேந்திரியங்கள், அந்தக் கரணம், முக்குணம், பிரகிருதி, கலாபஞ்சகம் ஆகிய எட்டும்கொண்ட புரியஷ்டகர். இவர்களுக்கு இறைவனே அந்தர்யாமியாயிருந்து முத்தி தருவான். மூன்றாவது ஆணவமே கொண்ட விஞ்ஞானகலர். இவர்கள் சுத்த வித்யா, ஈஸ்வர தத்துவங்களில் வசிப்பவர்கள். இவர்களை இறைவனே நேராக நடத்தி ஜீவன் முத்தராக்குவான். இந்த மூன்று பரிணாமப் படிகளையும் தாண்டியவர்களே சுத்த சைதன்யர். இவர்களுக்கே அருட்சோதி உள்ளும் புறமும் நிலவும், சிவ சைதன்ய தேகமும் சித்திக்கும்.

இவ்வாறு திருவருளால் பக்குவம் அடைய வேண்டும். இத் தெய்வ நிலை உள்ளறிவால் விளங்கும். இந்த உண்மையை உடலறிவும் மட்டமாயிருக்கும் சிலர் மறுத்தால், அறியாமை என்று ஒதுக்கித் தள்ளி, நாம் சிவயோக சாதனங்களைத் தீவிரமாகச் செய்து சுத்த சிவத்வம் பெறவேண்டும். அதற்கு அப்பர் சாதன முறை சொல்லுகிறார் கேளுங்கள்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பெனும் மனையகத்தில்
உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய் அட்டி,
உயிர்எனும் திரி மயக்கி
இடம்படு ஞானத் தீயால்
எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை
கழலடி காணலாமே.

மெய்ம்மையாம் உழவுசெய்து விருப்பெனும்
வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப்பாய்ச்சித்
தம்மையுள் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகிற்
சிவகதி விளையும் அன்றே.

16. சிவகதி

*உள்ளன்பர்காள்!* இப்படிப்பட்ட சுத்த சிவகதிக்குச் சாதனமான மந்திர ஜபத்தையும், நியமங்களையும், தத்துவ ரகசியங்களையும் இன்று சொன்னோம். இந்தப் பிரசங்கத்தைக் கேட்ட பயன் என்ன? இன்று முதல் இயன்றபோதெல் லாம் அமைதியாக உள்ளாழ்ந்து, ஓம் சிவம், சிவோஹம், சிவமயம் என்ற மந்திரத்தால் சிவராஜ்யம் நாட்டுவோம். தமிழகத்தைச் சுத்த சிவ சன்மார்க்க நிலையமாக்குவோம். அன்பினால் காரியசித்தி பெறுவோம். அருளால் சக்தி பெறு வோம்.

*அன்பான நெஞ்சிலே அருளான சாட்சியாய்*
*ஆனந்த நடனமிடுவாய்;*
*அரகர சிவாயநம எனும் அடியார் வாக்கில்இசை*
*அருவியெனவே பெருகுவாய்*
*உன்பாத மலரன்றி வேறொன்றும் அறிகிலேன்*
*ஒருமையுடன் உன் பெருமையை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வான தமிழ்பாடி உலகெலாம் புகழவே
ஓதநான் காதல்கொண்டேன்
என்பால் இரங்கியருள் இரவுபகல் இல்லாமல்
இதயகுகை ஒளிர் இரவியே
எண்ணியதை இந்தா எனத்தரும் தந்தையே
எனையூட்டி வளர் அன்னையே
இன்பான ஜோதியே ஏகாந்த மோனத்தில்
இனிதுவரும் அனுபூதியே
இதந்தரு சுதந்தர பதந்தரு திகம்பர
சிதம்பர பரப்பிரமமே.

சுத்தானந்த பாரதி.

★ ★ ★ ★ ★ ★ ★ ★

# சிவானந்தரின் அருளுரைகள்

அமைதி, அழிவின்மை, நித்தியானந்தம் என்பவை கடவுளிடம் மாத்திரம் பெறமுடியும்.

நீ பிராணனைக் கட்டுப்படுத்தினுல், நீ மனதை எளிதாகக் கட்டுப்படுத்தலாம்.

தண்ணீரிற் றாமரையிலை போன்று மாசு அடையாமல் உலகில் இருக்குக.

மெய்க்காட்சி அல்லது கடவுட்காட்சி அகந்தையை அகற்றுமல் சாத்தியமன்று.

உடலுக்கு உணவு அத்தியாவசியமானது போன்று, ஆன்மாவுக்குப் பிரார்த்தனை, தியானம் அத்தியாவசிமானவை.

★ ★ ★ ★ ★ ★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சியப்பர் கண்ட காட்சி - 11

(ஏழாலை. சிற்றம்பலம் முருகவேள்)

காட்சி: அங்கம் 4

நிர்மலமான, வெண்மையான கைலாயமலையில், பிரமன் மால் காணாத் தன் திருமேனியினை அடியவர்கள் கண்டு கும்பிட சிவபெருமான் வீற்றிருந்தார். அவரை 'தேவரீருடைய உண்மைத் தன்மையினை எனக்குச் சொல்லியருளல் வேண்டும்' என்று உமையாள் வேண்டினாள்.

அவரும், தான், தானேயாய் ஒன்றற்கும் தட்டாமல் ஒருவர்க்கும் எட்டாமல் நிற்கும் நிலையினையும், உயிர்கள் பால் இயல்பாய் எழும் பரம காருண்யத்தினால் அனந்தம் நிலைகளில் சக்தி காரியங்களாக அனந்தம் திருவுருவங்களை தானே எடுக்கும் இயல்பினையும், அனந்தம் திருவருள் ஆடல்களை தானே ஆடும் செம்மையினையும் எல்லாம் அன்போடு எடுத்து உபதேசித்தார்.

பரமபதியின் முன்னிலையில் உமையாள் ஒரு நேரம், ஒரு சிறு கணநேரம், தன் புகழை நினைத்து விட்டாள்.

அவள் சொன்னாள்: இத் திருவுருவங்கள் யாவும் உனது சக்தி காரியங்களே ஆயின், நான் உனது சக்தியேயாயின், இவை யாவும் என்னுடையன அன்றோ''.

அப்பொழுது பரமேஸ்வரன் சிறிது சிரித்தவராய், 'நான் உள் நின்று இயக்காவழி, இவையெல்லாம் என்ன. நீ கூடச் சடமே. உன் பொருட்டு இயக்காது சிறிது நீங்கி நீங்கி நின்று காட்டுகிறேன் பார் என்று சொல்லிச் சிறிது நீங்கி தானேயாய் தனித்து நின்றார். அப்பொழுது அகில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சராசரங்கள் யாவும் ஆட்டுவான் ஆட்டாவழி, பாவைக் களத்திலே பாவைகள் குலைந்து, விழுந்து சோர்ந்து கிடக்குமாறு சடமாய்க் கிடந்தன. அப்பொழுது அம்மையார் தன் பெருங் கருணைத் திறத்தினுல் 'நான் செய்த பிழையினை உளம் கொள்ளாது உயிர்கள் வினை துய்த்து உய்யும்படி மீண்டு அவற்றிற்கு உயிர்ப்பு நல்குவாய்' என்று உயிர்களுக்காகக் குறையிரந்து நின்ருள்.

பரமன் உருத்திரர்களை நினைத்தான். அவர்களும் கண்டிகையும் நீறும் புனைந்து, பயங்கரமான அந்த அந்தகாரமான இருளில், நான்கு யாமத்திலும் வில்வம் தாமரையிதழ் முதலியன சாத்தி அரனை வழிபட்டார்கள். பரமனும் அருள் கூர்ந்தான். அப்பொழுது எழுந்தனர் விட்டுணுவும் பிரமனும்; எழுந்தனர் இந்திராதியர்; வானவர் முனிவர் யாவரும் எழுந்தனர். உருத்திரர்கள், 'இவ்விரவு நாங்கள் உன்னை அர்ச்சித்து அருள் பெற்ருேம். அதே போல், எவ்விரவிலும் உன்னை அர்ச்சித்தோர் அருள்பெற வேண்டும்' என்று பரமனை இரந்து நின்ருர்கள். பரமனும் அவ்வாறே அருள் செய்தான். உருத்திரர்கள் தம்தம் பதம் சென்ருர்கள்.

எழுந்து நின்ற பிரம விட்டுணு முதலிய தேவர்கள் 'நாங்கள் பல காலம் இருளில் மூழ்கி, பாவங்களைச் சம்பாதித்துக் கொண்டோம். அவற்றிற்குத் தீர்வு இல்லையா?' என்று இறைவனைத் தொழுது நின்ருர்கள். 'அவையெல்லாம் உமையிடத்தனவாகும்' என்று கூறி பரமன் அவர்களை அனுப்பி வைத்தான்.

அம்மை, அவ்விடத்து நின்றவள், 'அவர்கள் பாவங்கள் என்னிடத்தாமாறு எங்ஙனம்' என்று கேட்டாள்.

பரமன், உன்பொருட்டன்றே நான் சிறிது தாளுகைத் தனித்து நின்றது. இன்னும் இத்தனை பாவங்களையும் உயிர்கள் பொறுக்கமாட்டா. அவற்றை நீயேதான் அவர்களுக்காகச் சுமக்க வேண்டும். உன்ஞல்தான் அது முடியும்' என்ருன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மை, 'இந்த எனது கதிக்கு தீர்வுதான் என்ன?' என்று கேட்டாள்.

பரமன், தக்கனுக்கு வரத்தின் பரிசினை நினைத்துக் கூறினான்.

'நஞ்சின் நிறத்னதயும் அமிர்தினும் மேலான சுவையினையும் உடைத்தாய் விளங்கும் காளிந்தி நீர்க்கரையில், மூல எழுத்தின் வடிவினை உடைய ஒரு வலம்புரிச் சங்காகி நீ இரு. தக்கன் எடுக்க நீ ஒரு அழகிய பெண் குழந்தை ஆகுவாய். தக்கனிடத்தில் வளர்ந்து என்னை நோக்கித் தவம் செய்ய, நீ கேட்கும் அத் தீர்வு கிட்டும்'.

- தொடரும்

# சிவானந்தரின் அருளுரைகள்

விவேகமும் வைராக்கியமுமே, சுதந்திரமும் பரமானந்தமுமாகிய நித்திய வீட்டுக்கு உன்னை நடாத்தும் ஆன்மாவின் இரு சிறகுகள்.

தர்மத்தைப் பற்றிய உண்மையான ஓர்ந்தறிவு மட்டும் உலகிற்கு அமைதியைக் கொணர முடியும்.

எவன் இழிவான தன்முனைப்பை இழக்கிறானோ, அவன் நித்திய வஸ்துவை நோக்கி எழுகிறான்.

மனம் என்பது நேற்றையதினதும் அதற்கு முந்திய நாளினதும் நினைவுக் கட்டே.

உலகைத் துறந்து ஆன்மானுபூதி யடைக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயாணக் கட்டுரை - 13

# பிலாய் மீண்டோம்

மு. சிவராசா

பிற்பகலில் கங்கை நதியை படகில் கடந்து மறுகரையடைந்தோம். அங்கு சந்நியாஸிகள் விடுதி ஒன்று. 'சுவர்க்காஸ்ரமம்' என்று பெயர். சிறிது தூரத்தில் 'கீதாபவனம்' என்ற பெரிய மடம். விசாலமான பல நடைகூடங்களும், மண்டபங்களும் கொண்டது. சுவர்களில் எல்லாம் கீதை வாக்கியங்களும் பாரத காவிய விளக்கப் படங்களும் நிறைந்திருக்கின்றன. உபந்நியாஸ மண்டபத்தின் சுவர்கள் நான்கிலும் சலவைக் கல்லில் பகவத் கீதை சுலோகங்கள் முழுவதையும் பொறித்திருக்கிறார்கள். இவ்விடத்தில் கோடைக் கால முழுதும் பகவத் கீதைப் பிரசங்கங்கள் தொடர்ந்து நடைபெறும். கோடானுகோடி மக்கள் வந்து போவர். கீதா பவனத்தில் பகவத் கீதையும் அதன் வித விதமான விளக்கக் குறிப்புகளும் பல்வேறு மொழிகளில் அச்சிடப் பெற்று மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்கிறார்கள்.

கீதா பவனத்துக்குச் சற்றுத் தொலைவில் காளி கம்பளி பாபா சமாதி இருக்கிறது. தான் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெற வேண்டுமென்ற நல்லெண்ணத்தால் இந்த இடங்களில் தவம் புரிய விரும்புவோருக்கு ஆசிரமங்கள் கட்டிக் கொடுக்கவும் உணவு தரவும் வழி செய்தவர் இந்த மஹான். கங்கைக் கரையோரமாய்ச் சேவை செய்யும் போது பல நூற்றுக் கணக்கான தவச் சாலைகளை ஆசிரமங்களைக் கண்டு கொண்டே லக்ஷ்மண் ஜூலா என்ற பால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்தை அடைந்தோம். இரண்டு மலைகளைத் தொடுப்பதாய் அமைந்திருக்கும் இப் பாலம் கங்கையைக் கடப்பதற்காகப் போடப்பட்டது. நடுவில் எவ்வித தூண்களும் இன்றித் தொங்கு பாலமாய் உள்ளது. இதன்வழி மறுகரையை அடைந்து லக்ஷ்மண் மந்திர் தரிசித்தோம். இதையடுத்து தெருவோரம் நூற்றுக் கணக்கான சிறு குடிசைகள். அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயர் இக் குடிசைகளில் வதிகிறார்கள். ஊருக்கு ஒதுக்குப் புறமாய் அரசாங்கம் இவர்களை இங்கு கொண்டுவந்து விட்டிருக்கிறது. ஒருபுறம் பக்தி பெருக்கும் சாதனங்கள்; இன்னொரு புறம் உலக வாழ்வின் துன்பங்களுக்கு எடுத்துக் காட்டு!

நடந்தே சிவானந்தாஸ்ரமம் வந்தோம். மாலையில் ஸ்ரீ சிவானந்தர் சமாதியில் அருச்சனை ஆராதனை தரிசித்து விஸ்வநாத் மந்திர் வணங்கி தினமும் நடைபெறும் இரவு சத்சங்கத்தில் பங்கு பற்றினோம். பெரிய சுவாமி ஸ்ரீ சிவானந்தாஜியவர்கள் இருக்கும்போது இரவு சத்சங்கத்துக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து ஆசிரமத்தில் உள்ளோர் எல்லோரும் கட்டாயம் பங்குபற்ற வேண்டும் என்று விதி செய்திருந்தார்கள். இன்றும் ஏறக்குறைய அப்படியே நடந்து வருகிறது. அன்று திவ்விய ஜீவன சங்கத் தலைவர் சுவாமி சிதானந்தஜி மகராஜ் வெளியூர் சென்றிருந்ததால் பொதுச் செயலாளர் சுவாமி கிருஷ்ணானந்தஜி தலைமையில் அன்றைய சத்சங்கம் நடைபெற்றது. சத்சங்க முடிவில் சிவானந்த ஹிருதயானந்த மாதாஜியவர்களை வணங்கி அவர்களுடன் உரையாடி உவகை பெற்றேன்.

மறுநாட்காலை சுவாமி நிர்மலானந்தாஜியவர்களுடன் நானும் நண்பர் சேனாதிராசாவும் கங்கை சென்று புரோகிதர் ஒருவர் வழிப்படுத்த, சிரத்தை செய்து கங்கா ஸ்நானம் செய்தோம். நீரின் தட்பம் 5°Cக்கு மேல் இருந்திருக்காது! பின்னர் யாவரும் சிவானந்த ஆசிரமத்தின் பகுதிகளாகிய கண் வைத்திய நிலையம், பிரசுராலயம், புத்தகசாலை, மருந்துகள் தயாரிக்கும் இடம், அவை விற்குமிடம், காரியாலயம் முதலிய யாவற்றையும் பார்த்தோம். மதுரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிசென்றிருந்த சுவாமி சிதானந்தாஜியவர்கள் அன்றுதான் ஆசிரமம் திரும்பியிருந்தார்கள். மாலை 4 மணியளவில் சுவாமிஜியைத் தரிசிக்கச் சென்றோம். சுவாமிஜியவர்களை இலங்கையில் வரவேற்று, நாட்டின் பல பகுதி மக்களும் பயனடையும்படி பிரயாண ஒழுங்குகள் செய்த குழுவில் முக்கிய பங்கு கொண்டவன். சுவாமியவர்களும் அடியேனை நினைவில் வைத்திருந்தார்கள். மிக்க அன்போடு நலம் விசாரித்தார்கள். இலங்கையில் உள்ள சிலரின் சேம லாபங்களையும், திவ்விய ஜீவன சங்கக் கிளைகளின் தொண்டுகளையும் கேட்டறிந்தார்கள். அன்று அவர்களிடமிருந்து பெற்றவற்றுள் இரண்டு அரியன. ஒன்று மதுராவிலிருந்து அவர்கள் கொண்டு வந்த லட்டு பிரசாதம்; மற்றது 'இவ்வுலகில் ஒன்று மட்டும் சாசுவதமானது, அதாவது எதுவும் சாசுவதம் அல்ல என்பது. (one thing is certain in this world, that is everythink is uncertain) என்ற அறிவுரை. இவ் வரியன இரண்டையும் உள்ளே எடுத்துக் கொண்டு அருள் பெருக்கும் தவச்சாலையை விட்டகன்றோம்.

காரில் ஹரித்துவாரம் வந்தோம். இந்த இடத்தை சைவர்கள் 'ஹரத்துவாரம்' என்கிறார்கள். வைணவர்கள் 'ஹரித்துவாரம்' என்கிறார்கள். இரு சாராரையும் பகைத்துக் கொள்ள விரும்பாதவர் போல் ஆங்கிலத்தில் 'ஹர்த்துவார்' 'Hardwar' என்கிறார்கள். இவ்விடத்தையே 'மாயா' என்ற தலமாகச் சொல்லுகிறார்கள். இங்கு தினமும் சூரிய அஸ்தமன வேளையில் நடைபெறும் கங்கா பூஜை மிக விசேடமானது. பொருள்களை 'மதறாஸ் சத்திரத்தில்' வைத்து விட்டு 'பிர்லா காட்' வந்தோம். இங்குதான் கங்காபூஜை நடைபெறும். கங்கையின் வேகம் இவ்விடத்தில் அதிகம். கிளை ஒன்று ஆக்கி, அதன் வழி வேகம் சிறிது குறைந்து வந்த நீர் மீண்டும் பெரிய நதியில் சேரும்படி செய்த கரையோரம். அக் கரையோரம் ஆறு முக்கியமான கோவில்கள். சூரியன் அஸ்தமித்த சிறிது நேரத்தில் இந்த ஆறு கோவில்களிலும் பூஜை நடைபெறும். பின்னர் ஓரே நேரத்தில் அர்ச்சகர்கள் தீபங்களை வெளியிற் கொணர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கைக் கரையில் நின்று கங்கா தேவிக்குத் தீபாராதனை செய்வர். அதே நேரத்தில் நூற்றுக் கணக்கான பக்தர்கள் இலைகளால் செய்யப்பட்ட சிறு படகுகளில் பூக்கள் நிரப்பி, அவற்றின் நடுவே நெய் விளக்கேற்றி கங்கையில் மிதக்க விட்டு வழிபாடியற்றுவர். நீரோடு சேர்ந்தோடும் இப் பூந்தொட்டிகளில் விளக்குகள் வெகு தூரம் வரை மினுங்கிக் கொண்டிருக்கும். வானத்துத் தாரகைகளின் கண் சிமிட்டலுக்குப் போட்டியாய் அமையும் இக் காட்சி. கங்கையின் கண் சிமிட்டல் ஓய்ந்ததென்று அறிந்த பின்னர் தான் வானத்து மீன்கள் துணிவுடன் பிரகாசிக்கும். வெட வெடக்கும் குளிர் நேரத்திலும் மெய்ம் மறக்கும் இக் காட்சியில் மயங்கிப் பின்னர் அக் கோவில்களுக்கும் சென்று வணங்கினோம். கங்கையின் புனித நீரைச் செம்புகளில் அடைத்துக் கொண்டு சத்திரம் வந்தோம். அன்றிரவு புகைவண்டியில் ஏற முடியாதபடி ஒரே ஜன நெருக்கம். எனவே இரவு தங்கி மறுநாட் காலை 6 மணி வண்டியில் புறப்பட்டு மாலை 5.15க்கு டெல்லி வந்தோம். அங்கு வண்டி மாறி 10.15க்குப் புறப்பட்ட வண்டியில் ஜய்ப்பூருக்குப் பயணமானோம்.

ஜய்ப்பூர் வரும்போது 30.11.66 காலை 5.30 மணி. உல்லாசப் பிரயாணிகள் பஸ்ஸில் 9 மணிக்கு ஊர் பார்க்கப் புறப்பட்டோம். அவ் வண்டியில் நியூயோர்க்கைச் சேர்ந்தோர் இருவர், தங்கனிக்காவிலிருந்து வந்தவர் இருவர், இஸ்ரவேல் வாசிகள் இருவர், இலங்கையரான நாம் நால்வர் இருந்தோம். ஏனையோர் இந்தியர். முதலில் 'ஹாவா மஹால்' என்ற மாளிகைக்கு வந்தோம். எட்டு அங்குலத் தடிப்பில் கட்டப்பட்டு ஆறு அடுக்கு மாளிகையாக விளங்குகிறது. நிலத்தின் கீழ் இன்னும் மூன்று அடுக்குகள். இச் சிறிய அரண்மனை பார்வையில் எங்கள் ஊர்ச் சப்பரம் போலத் தோன்றும். கட்டடக் கலை பிரமிக்கத் தக்கது. 'ஹாவா மஹால்' என்றால் 'காற்று மாளிகை' என்பது கருத்து. இங்கிருந்து அம்பர் அரண்மனை சென்றோம். இது ஒரு சிறு குன்றின் மீதுள்ளது. சுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானூறு யார் உயரம் ஏறவேண்டும். போய் வருவதற்கு ஊர்தியாக யானை வைத்திருக்கிறார்கள். நாலுபேர் போய் வர ரூபா 37. அரண்மனை பல பகுதிகளைக் கொண்டது. சலவைக்கல், சிவப்புப் பூச்சு ஆகியன அழகு செய்கின்றன. ராஜா மான்சிங் கட்டிய இந்த அரண்மனையில் கணபதி கோவில் ஒன்றும் காளிகோவில் ஒன்றும் இருக்கின்றன. ஆயிரம் ஆயிரம் கண்ணாடிகள் பதித்த சுவர்களும் விதானங்களும் எண்ணரிய பிரதி விம்பங்களைக் காட்டுகின்றன. வழிகாட்டியின் கையில் இருந்த ஒரு மெழுகுவர்த்தியின் சுடர் பல்லாயிரம் சோதி ரூபமாய்க் காட்சி கொடுத்தது.

ராஜா மான்சிங் என்பவன் அக்பர் பாதுஷாவின் தளபதி. இவன் தனக்கெனக் கட்டிய இவ்வரண்மனை அக்ரா அரண்மனையைக் காட்டிலும் அழகானதென்று கேள்வியுற்ற அக்பர், இதனை அழிக்க எண்ணி இங்கு புறப்பட்டான். அதையறிந்த ராஜா மான்சிங் அவசர அவசரமாக அழகிய வேலைப்பாடுகள் யாவற்றையும் சுதையால் மூடுவித்து அரண்மனையின் அழகை ஒளித்து விட்டான். பொறாமைக்காரனின் கோபத்துக்கு அரண்மனையின் எழில் தப்பியது. 1941ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம் சுதையை அகற்றி அழகை வெளிக் கொணர்ந்தது.

இங்கிருந்து நகரின் நூதனசாலை, வானிலை ஆய்வுச் சாலை ஆகிய இடங்களுக்குச் சென்றோம். வானிலை ஆய்வுச் சாலையில், டில்லியில் உள்ளவை போன்ற பலவித கருவிகளுள. சூரிய ஒளி கொண்டு நேரம் காட்டும் கருவி இங்கு மட்டுமே இன்றும் சரியாக இயங்குகிறது. ஜெய்ப்பூர் திட்டமிட்டு நிர்மாணிக்கப்பட்ட அழகான நகரம். தெருக்கள் யாவும் அகன்றவையாய், நேரானவையாய், சுத்தமுடையனவாய்க் காணுகின்றன. ஜய்ப்பூர் பார்த்து டில்லி வந்தோம். அங்கிருந்து புறப்பட்டு 4.12.66 காலை பிலாய் நகர் வந்து சேர்ந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபிரிக்காவில் ஸ்ரீ சத்திய சாயி பாபா

(பகவானது ஐதராபாத் 1968 ஜூலை 19 பேச்சு - எஸ். அனுமந்தர் ராவ் தகவல்படி.)

பகவான் இந்தியாவிலிருந்து புறப்பட்டுக் கம்பாலா விமான நிலையம் சென்றடைந்தார். கிறிஸ்தவர்களைப் பெருமளவு கொண்ட இலட்சக் கணக்கான ஆபிரிக்க மக்கள் பாபாஜி அமைதியை விரும்புவதற் கேற்றபடி விமான நிலையத்தில் முழந்தாள்களில் அமைதியாகக் குழுமியிருந்தார்கள். காட்டுப் பூக்களால் அலங்கரிக்கப்பட்டு சிங்கம், புலி தோலாசனங்கள் கொண்ட லொறியொன்று விமானத்தருகில் கொண்டு வரப்பட்டு, சுவாமிஜி அதில் அமர்ந்து எல்லாருக்கும் தரிசனம் கொடுத்தபடி சென்றுர். நாதவேணுலவ் கிரிதர கோபால் பாடல் பாடப்பட்டது. விமான நிலயத்திலிருந்து மூன்று மைல் தூரத்திலுள்ள வீடொன்றிற்கு அவர் அதிதியாகப் போந்தபோது மலர்மாரியும் 108 நாமங்கள் எழுதப்பட்ட கொடிகளும் வீதி இரு மருங்கிலும் டியூப் மின்சார விளக்குகளும் எதிர்கொண்டன.

பாபாஜியுடன் திருவாளர்கள் ராஜா ரெட்டி, கஸ்தூரி, இந்துலால் ஷா, மஹாராஷ்டிர மந்திரி சாவந்த் ஆகியோர் போயிருந்தார்கள். ஆனல் கம்பாலாவிலிருந்து நைரோபி வரையிலான 600 மைல்கள் வரையில் மக்கள் கூட்டத்தினுல் சுவாமிஜியைத் தொடர்ந்து செல்வது முடியாதாயிற்று. சுவாமிஜி புதிய காரில் பின் ஆசனத்தில் அமர்ந்திருக்க முன் ஆசனத்தில் ஹைகமிஷனரும் நைரோபி பொலிஸ் அதிகாரியும் இருக்க ராணுவ அதிகாரி காரைச் செலுத்தினர். காரின் முன்னுல் இருமருங்கிலும் மோட்டார் சைக்கில்கள் செல்ல முன்னணியில் இரண்டு ஜீப்புகள் நிறைய ராணுவ பொலிஸ் அதிகாரிகள் சென்றனர். பகவான் அதனைப் பார்த்து வேடிக்கையாக ஒரு யுத்தக் கைதி போல் கொண்டு செல்கிறுர்கள் என்று குறிப்பிட்டார். இந்திய ராஷ்டிரபதிக்கு அளிக்கப்படும் மரியாதை முறைகள் பாபாவுக்குத் தரப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10-7-68 குரு பூர்ணிமா தினம் வரையில் பகிரங்க இடங்களிலும், ரோட்டரி கிளப்புகளிலும், மைதானங்களிலும், எம். எல். ஏ. விடுதிகளிலும் சபை மண்டபங்கள் மூதலானவற்றில் பகவான் ஏகப்பட்ட சத்சங்க உபன்னியாச நிகழ்ச்சிகளில் ஈடுபட்டிருந்தார். அவையெல்லாம் டெலிவிசனில் காட்டப்பட்டன. பாபா பத்தாந் திகதி இந்தியா திரும்ப இருந்தார். ஆனால் பத்தாந் திகதியன்று ராணுவ உத்தியோகத்தர் ஒருவர் பகவான் குருபூர்ணிமா தினத்தில் புறப்பட்டுச் செல்வதாக இருந்தால் தாம் தம்மைத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப் போவதாகச் சொன்னார்! என்னே அவரது பக்தி! ஆகவே பகவான் 14ஆந் திகதி வரை பம்பாய் புறப்படுவதைப் பின்போட்டார்.

அந்த நான்கு நாட்களிலும் பகவான் நைரோபிக்கும் அதன் சுற்றுப் புறங்கட்கும் 4 விமானங்கள் பின்தொடர ஒரு விசேட விமானத்தில் சென்று அருளைப் பொழிந்தார். தேவலோகத்திலிருந்து வந்த தந்தை, கடவுள் என்றே கருதினார்கள். 10ந் திகதி ஆபிரிக்க மக்களின் பக்தியினால் பகவான் பரவசமடைந்து இலட்சக் கணக்கான மக்கள் முன் னிலையில் கையை அசைத்தபோது ஆகாயத்திலிருந்து பொற் கலசமொன்றுடன் ஒரு பொற் கரண்டியும் தோன்றின. அவர் அப் பொற் கலசத்திருந்த தேனை எல்லாருக்கும் விநியோகித்தார். அப் பொற் கலசம் 50 ஆயிரம் ரூபா பெறுமதியாகத் தக்கது.

14ஆந் திகதி புறப்படும் தருவாயில் நைரோபி விமான நிலையத்தில் மக்கள் அழுது கொண்டே முண்டியடித்துக் கொண்டிருந்ததால் பகவான் விமானத்தினுள் நுழைவதே சிரமமாக இருந்தது. ஆகவே அவர் ஒரு பாரந்தூக்கி மூலம் விமானத்தினுள் புக நேர்ந்தது. பாபா அவர்கள் பக்தர்களைப் பார்த்து உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். அவர்கள் உடனே 'ஒரு துண்டு அப்பத்தை ஆயிரக் கணக்கான மக்களுக்குப் பகிர்ந்தளித்தது போல, கலசத்து அமிர்தத்தை லட்சக் கணக்கானவர்களுக்குத் தந்த எங்கள் மேலான தந்தை எங்களுக்கு வேண்டும் என்று கத

றினர்கள். பகவான் கையை அசைத்து ஆசீர்வதித்தார். எல்லாரும் ஆச்சரியப்படும் வண்ணம் ஆயிரக் கணக்கான அவரது படங்கள் அவரது கரங்களிலிருந்து புறப்பட்டு ஒவ்வொரு பக்தர்களின் கரங்களிலும் அம்புகள் நேராகச் செல்வது போல் சென்று சேர்ந்தன. பகவான் மேல் ஆபிரிக்க மக்கள் வைத்த ஈடிணையற்ற அன்பினைப் பற்றிப் பகவான் ஐதராபாத்தில் கூறினர். பிரசாந்தி நிலைய வரலாற்றிலே இது ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும்.

# சிவானந்தரின் அருளுரைகள்

அமைதி, கடவுள், ஆத்மா, பிரம்மன், அழியா வஸ்து, வீடுபேறு முதலியவை ஒரு பொருட் கிளவியே.

உடல் ஓயாது ஆன்மாவுடன் போரிடுகிறது. ஆகையால் என்றும் விழிப்பாயிருக்குக.

நீயே ஒரு புனித வாழ்வு நடாத்த வேண்டும். உனது குரு இதை உனக்காகச் செய்தல் முடியாது.

மெய்ம்மையில் இருமை இல்லை. எல்லா உருமாற்றலுங் கண் மாயமானவை.

வாழ்வின் மிக முக்கிய தேவைகளில் ஒன்று, ஆன்மிகச் சிறப்பிற் றியானம்.

மௌனத்துள் நுழைக. பகவானைப் பிரார்த்திக்குக. பகவானை உற்றுக் கேட்குக.

பதி, பசு, பாசத்தைப் பற்றிய உண்மையறிவு குருவிடமிருந்து பெறப்பட வேண்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரனால் ஆகாதது அடியவரால் ஆகும்!

சுவாமி: ராமதாஸ்
Bhavan's Journal: 11:8:68

தமிழாக்கம்: ம- சி. சிதம்பரம்பிள்ளை

ஒரு கிராமத்தில் ஒரு விஷ்ணுபத்தர் இருந்தார். அனேக காலம் விவாகமாகியும், ஆண்டவனை வேண்டியும் பல விரதங்கள் அநுட்டித்தும் பின் உளப்பேறு இல்லாது துயருற்றார்.

நாரதமுனிவர் அக்கிராமத்தினூடாக ஒருநாள் சென்றார்.

விஷ்ணுபத்தன் மாமுனிவரைப் பார்த்து எங்கு செல்கின்றார் என வினவினார். அதற்கு அவர் வைகுந்தம் போவதாகக் கூறினார். விஷ்ணுபகவானிடம் தனக்கு ஏன் புத்திர பாக்கியம் கொடுக்கவில்லை என்பதனையும், எப்போது அருள எண்ணியிருக்கின்றார் என்பதனையும், கேட்டறிந்து வருமாறு நாரத முனிபுங்கவரை வேண்டிக் கொண்டார்.

நாரதமுனிவர் வைகுந்தம் சேர்ந்ததும் பத்தனின் குறைபாட்டைப்பற்றிக் கேட்டார். ஆண்டவன் கூறினார் 'விதியின் பிரகாரம் அந்தப் பத்தனுக்குப் புத்திர பாக்கியம் இப்பிரவியில் இல்லை' என்றார்.

இத்துன்பச் செய்தியை கிராமத்தில் உள்ள விஷ்ணுபத்தனுக்குக் கூற திரிலோக சஞ்சாரியாகிய நாரதமுனி விரும்பவில்லை.

பல வருடங்கள் கழிந்து விட்டது. நாரதமாமுனிவர் பத்தன் இருக்கும் கிராமத்துக்கு வந்தார். விஷ்ணுபத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனைக் கண்டார். மூன்று குழந்தைகள் வீட்டு முற்றத்துள் நின்று விளையாடுவதைக்கண்டு அவர்கள் பத்தனுடைய பிள்ளைகள் என்பதனை அறிந்து அதிசயமும் ஆச்சரியமும் அடைந்தார்.

பத்தனுக்கு எவ்வாறு பிள்ளைப்பாக்கியம் உண்டா யிற்று என்பதனை அறிவதற்கு விஞ்ஞான முனி அவா வினர். பத்தனையே கேட்டும் விட்டார்.

நாரதமுனிவரைப் பார்த்து, சகல லோகங்களுக்கும் சென்று அங்கங் கெல்லாம் நடைபெறுபவைகளை நேரே காணும் பெரியபேறு பெற்ற தங்கட்கு இது தெரியாத தல்லவே! இருந்தும் சொல்லுவேன்! நீங்கள் வந்து போன பின் ஓர் அடியவர் இங்கு எழுந்தருளினர். அவரை தரி சிக்கவும் சேவைபுரியவும் பாக்கியம் பெற்றேன். அவர் என்மேல் பரிந்து 'என்னவேண்டும்' எனக்கேட்டார்.. புத் திரபாக்கியமற்ற அபாக்கியவானாக உள்ளேன். அதனை நீக்கியருள வேண்டும் என்று மன்றுடினேன். ஒரு பிள்ளை இல்லை மூன்று பிள்ளை வேண்டும் என்று கேட்டேன்'

இதனைக் கேட்ட மாமுனி நேராக வைகுந்தம் அடைந்து மாயவனைப்பார்த்துப் பொய் கூறியதற்குக் கடிந்தார். சில வருடங்கட்குமுன் ஒரு பத்தனைப்பற்றியும் பிள்ளைப்பேறில் லாத காரணத்தையும் கேட்டபோது, அப்பத்தனுக்கு மக் கட்பேறு கிடையாது என்றீரே! அவருக்கு மூன்று பிள்ளை கள் பிறந்துள்ளார்களே! இதற்கு உங்கள் உத்தரம் யா தோ! என்றார்.

விஸ்ணுபகவான் சிறிது நகைத்து, அப்படி நடந்திருந் தால் அது அடியார்களின் வேலையாக யிருக்கவேண்டும். விதியை மாற்றக்கூடிய வல்லமை அடியார்கட்கே உண்டு என்றார்.

**அடியார்கள் பெருமையை**
**அடியார்கள் அறிவார்கள்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்

## அரிய ஆத்மீக நூல்கள்

| | | |
|---|---|---|
| 1 | திருப்புகழ் பூஜாமலர் | .50 |
| 2 | சமரச ஞானக் கோவை - க. இராமச்சந்திரா | 5.00 |
| 3 | ஆத்மநாதம் - மகரிஷி சுத்தானந்தர் | 3.00 |
| 4 | தீங்கனிச் சோலை - பரமஹம்சதாசன் | 2.50 |
| 5 | சைவ இலக்கிய கதா மஞ்சரி - அருணாசல தேசிகர் | 3.00 |
| 6 | பாட்டாளி பாட்டு - மகரிஷி சுத்தானந்தர் | 1.50 |
| 7 | இளங்கோவின் கனவு - நடராஜன் | 2.25 |
| 8 | ஆத்மஜோதி மலர் | 1.00 |
| 9 | நவராத்திரிப் பாடல் | .50 |
| 10 | கந்தரனுபூதி | .15 |
| 11 | கூட்டு வழிபாடு | .30 |
| 12 | கந்த சஷ்டி கவசம் | .15 |
| 13 | நித்திய கரும விதி | .25 |
| 14 | செல்லச் சந்நிதி பாடல் | .15 |
| 15 | கதிர்காமப் பதிகம் | .25 |
| 16 | மார்கழி மாதப் பாடல் | .20 |
| 17 | பித்துக்குளி முருகதாஸ் பாடல் | .50 |
| 18 | திருநீற்றின் பெருமை | .10 |
| 19 | தருமம் | .20 |
| 20 | சிவானந்தரின் அருளுரைகள் | .60 |
| 21 | இவ்வாறு அருள்கிறார் சிவானந்தர் | .75 |
| 22 | பக்தி | .20 |
| 23 | பௌத்தம் | .20 |
| 24 | பிரமம் | .20 |
| 25 | அவதாரம் | .20 |
| 26 | முக்கிய உபநிஷதங்களின் சாரம் - பாகம் 9-10 | .50 |
| 27 | சுவேதாசுவதர உபநிஷத விளக்கம் | .50 |

தபாற் செலவு தனி.

வியாபாரிகட்குத் தகுந்த கமிஷன் உண்டு.

**ஆத்மஜோதிநிலையம், நாவலப்பிட்டி**

(இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Reg..tered at the G.P.O. as a Newspaper M. L. 59/300

# சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்!

இறைவன் திருவருளால் ஆத்மஜோதிக்கு 19 ஆண்டுகள் பூர்த்தியாகி 20வது ஆண்டு ஆரம்பமாகி 11 இதழ்கள் வெளிவந்துள்ளது. பல சந்தா நேயர்களுடைய ஆதரவினாலேயே ஜோதி மாதந்தோறும் சுடர்விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. வழக்கம்போல் அன்பர்கள் அனைவரும் இவ்வாண்டுச் சந்தாவை அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். சந்தா நேயர்கள் தமது சந்தா இலக்கங்களைக் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இந்தியாவில் உள்ளவர்கள் தங்கள் சந்தாவை வழக்கம்போல்

## R. வீரசம்பு, சம்பு இன்டஸ்ரீஸ்.

அரிசிப்பாளையம். சேலம்–9.

என்ற விலாசத்திற்கு அனுப்பி வைத்து இவ்விடமும் அறியத்தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

# ஆத்மஜோதி நிலையம்,

## நாவலப்பிட்டி, (இலங்கை)

அச்சிடுவிப்போர்: ஆத்மஜோதி நிலையத்தினர்
அச்சிடுவோர்: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்
வெளியிட்ட திகதி: 16–9–68.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org